1974 [சனவரி 24]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) காரணி கிராமம் குளப்புறம்போக்கு சர்வே எண் 165-ல் இருளர்கள் குடியேற விருப்பப்படாததால் சைதாப்பேட்டை தனித் தாசில்தார் வேறு நிலத்தை நில ஆர்ஜிதம் செய்ய தக்க நடவடிக்கை எடுத்து வருகிறூர்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, அந்தக் கிராமத்தில் செட்டில்மெண்ட் வேலை முடிந்துவிட்டதால், இருளர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டத்தில் தாமதமில்லாமல் வேறு தகுதியான இடத்தைத் தேர்ந்தெடுக்க இந்த ஆண்டே நடவடிக்கை எடுக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, எடுத்த இடத்திலே குடியேற முன்வந்தால் எப்பொழுதோ முடிந் திருக்கும். கொடுக்கும் இடத்தில் குடியேற முற்படாததால் வேறு இடம் பார்க்க வேண்டியுள்ளது. ஆகவே, அவர்கள் விருப் பப்படியே பார்க்க வேண்டுமென்று இருப்பதால் நாட்கள் ஆகிறது. இதுதான் தாமதத்திற்குக் காரணம்.

மானுமதுரையருகேயுள்ள வைகைப் பாலம்.

*137 வினு—**திரு. த. சோனேயா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானுமதுரை வைகையில் உள்ள மேம்பாலம் பழுதுப்பட்டு இருப்பது உண்மையா ?

(இ) அதை செப்பனிடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா ?

(உ) ஆம் எனில், அதன் மதிப்பீடு என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) & (உ) இவ்வேலையை ஐந்தாவது ஐந்தாண்டு திட்டத் தில் மத்திய சாலை நிதித்திட்டத்தின் கீழ் ரூபாய் 35 லட்சம் செலவில் எடுத்துக் கொள்ள மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப் பட்டுள்ளது. மத்திய அரசு அனுமதி பெற்றதும் இவ்வேலையை ஐந்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் எடுத்துக் கொள்ளக் கூடும்.

திரு. த. சோனையா: தலைவரவர்களே, மானாமதுரை வைகையின் குறுக்கே இருக்கும் பாலம் இராஜராஜேஸ்வர சேதுபதி பாலம் என்று அந்தக் காலத்தில் கட்டப்பட்ட பாலம். அது பழுதடைந்திருப்பதால் வண்டி வாகனங்கள் செல்லும்பொழுது ஓட்டுநர்கள் கூட அஞ்சுகிறார்கள். அடிக்கடி வைகையிலே இறக்கிச் செல்கிறார்கள். எனவே அதைப் பழுதுபார்க்க வேண்டும் அல்லது வேறொரு பாலம் கட்ட திட்டமிடப்பட வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அதற்குப் பதில் புதிய பாலம் கட்டத்தான் 35 இலட்சம் ரூபாயில் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன்.

திருவள்ளூர் வட்டத்தில் புதிய பாலங்கள்.

*138 வினா—**திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், மாகரல் கண்டிகை, தாராட்சி ஆகிய இரு கிராமங்களிலும் மேற்புறங்களில் செல்லும் பொதுப் பணித் துறைக் கால்வாய்களின் மேல், மறுபுறம் செல்ல அமைக்கப்படும் பாலங்கள் எப்போது முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: திருவள்ளூர் வட்டம் மாகரல் கண்டிகை கிராமத்தின் அருகில் சோழவாம் வரத்துக் கால்வாயின் குறுக்கே ரூ. 60,000 மதிப்பீட்டுச் செலவில் பாலம் அமைக்கும் திட்டம் அரசு ஆணை எண். 3403, பொதுப் பணித் துறை, நாள் 20—11—1973, அரசு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

திருவள்ளூர் வட்டம் தாராட்சி கிராமத்தின் அருகே ரூ. 27,700 மதிப்பீட்டுச் செலவில் பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கின்றது, விரைவில் ஆணை பிறப்பிக்கப் படும்.